


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.2.2026) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், சென்னை, அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 8 குடியிருப்புகளை திறந்து வைத்து, சென்னை, செனாய் நகரில் 62 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, என். கயல்விழி செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மகளிர் உரிமைத் தொகையை ரூ.2000 என உயர்த்தி வழங்குவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!.. முதல் பக்கத் தொடர்ச்சி!

கூடுதலாகக் கோடைக்காலச் செலவுகளை கருத்தில் கொண்டு மேலும் 2 ஆயிரம் ரூபாய் சிறப்புத் தொகையும் சேர்த்து, இந்த பிப்ரவரி மாதம் 5 ஆயிரம் ரூபாயைச் சிறப்பு மகளிர் உரிமைத் தொகையாக ஒரு கோடியே 31 லட்சம் பெண்களுக்கு வழங்க உத்தரவிட்டிருக்கேன்.

இந்த தருணத்தில் இன்னொரு அன்பான வேண்டுகோள்: இந்த 5 ஆயிரம் ரூபாயை அடுத்த 3 மாதத்துக்கு நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதால், கொஞ்சம் கவனமாகச் செலவிடுங்கள்.

முடிந்த அளவுக்குச் சேமிக்கவும் பாருங்கள்.

அன்புச் சகோதரிகளே, உங்கள் ஆதரவோடு அடுத்து அமையப் போவதும் திராவிட மாடல் ஆட்சிதான்! அதனால், நீங்கள் மனம் குளிரும் சிறப்பான ஒரு அறிவிப்பையும் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். அடுத்த திராவிட மாடல் 2.0 ஆட்சிக் காலத்தில், உங்களின் உரிமைத் தொகை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். சொன்னால் சொன்னதைச் செய்யும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி இது! இதையும் எப்படி செய்வோம் என்று சிலர் கேட்கலாம்!

**எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி, அடுத்த 3 மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமைத் தொகையை நிறுத்த, சூழ்ச்சி செய்வதாகத் தகவல் வருகிறது! இதுபற்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் சிலர் முயற்சி செய்வதாகச் செய்திகள் வருகிறது.**

கடந்த ஆட்சியின் 10 ஆண்டுகளில், தமிழ்நாடு அடைய முடியாத பொருளாதார வளர்ச்சியை இந்தியாவே திரும்பிப் பார்க்கும் அளவுக்குச் சாதித்துக் காட்டியவர்கள் நாங்கள்!

அதனால், எந்தத் தடை வந்தாலும் அதையெல்லாம் தாண்டி, தமிழ்நாடே வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

# பணி நியமன ஆணைகளை வழங்கி - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

## முதல் பக்கத் தொடர்ச்சி

உங்கள் வளர்ச்சியைப் பார்த்து, உங்கள் பெற்றோர்கள் எந்தளவுக்கு மகிழ்ச்சி அடைகிறார்களோ, அதே அளவுக்கு நானும் மகிழ்ச்சி அடைகிறேன். திராவிட இயக்கம் என்ன சாதித்தது? என்று யாராவது கேட்டால் அவர்களுக்கு நீங்கள்தான் பதில்!

ஒருகாலத்தில், நம்முடைய வீடுகளையும், குடும்பங்களையும் எப்படி சொல்லி அடையாளப்படுத்துவார்கள் என்றால், அது உங்களுக்கே தெரியும்! திராவிட இயக்கத்தின் எழுச்சியால், அந்தக் காலம் மலையேறியது. இது எஞ்சினியர் வீடு. இது ஆசிரியர் வீடு. இது பேராசிரியர் வீடு. இது V.A.O. வீடு. இது R.I. வீடு. இது இன்ஸ்பெக்டர் வீடு. டாக்டர் வீடு. என்று பெருமையோடு சொன்னோம்! அதன் தொடர்ச்சிதான் நீங்கள் எல்லோரும்! படிப்பை இறுகப் பிடித்துக் கொண்டு, முன்னேறி வந்திருக்கின்ற உங்கள் எல்லோரையும் பார்க்கின்றபோது, உணர்ச்சிப் பெருக்குடன் உச்சத்தில் நான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன்! இதுதான், தமிழ்நாடு எப்போதும் பார்க்க விரும்பும் காட்சி! இந்த நாள், உங்கள் கனவுகள் நனவாகியிருக்கின்ற நாள்! உங்கள் பெற்றோருடைய கனவுகள் நிஜமாகியிருக்கின்ற நாள்! உங்கள் குடும்பங்களுக்கு நீங்கள் பெருமைதேடி தந்திருக்கக்கூடிய நாள்! அந்த வகையில், பொன்னான ஒரு நாள்!

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் உள்ளிட்ட தேர்வு முகமைகளின் மூலமாக தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற 9 ஆயிரத்து 801 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணை வழங்குவதில் நான் பெருமை கொள்ளக்கூடிய நாள் இந்த நாள்! உங்கள் கையில் இருக்கின்ற பணி நியமன ஆணை என்பது, உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரம் மட்டுமல்ல; உங்களின் எதிர்காலத்திற்கான உத்தரவாதம்! இளைஞர்களான நீங்கள்தான் தமிழ்நாட்டின் பலம்! நீங்கள் முன்னேறும்போதுதான், தமிழ்நாடும், இந்திய நாடும் முன்னேறு கிறது! இதுவரைக்கும் நீங்கள் கற்ற கல்வி, பெற்ற அனுபவங்கள் ஆகியவற்றை, இனி உங்கள் பணிகள் மூலமாக, இந்த சமூகத்தில் விதைக்கப் போகிறீர்கள்! கோடிக்கணக்கான மக்கள், தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு உங்களை நம்பித்தான் வருவார்கள்! நீங்கள்தான் நம்முடைய அரசின் முகங்களாக செயல்படப் போகிறீர்கள்! நீங்கள் சிறப்பாக செயல்பட்டால்தான், அரசு நிர்வாகம் தடையில்லாமல் செயல்படும்! உங்களைத் தேடி வருகின்ற மக்களுடைய நம்பிக்கையை நீங்கள் காப்பாற்ற வேண்டும்!

### நீங்கள் சார்ந்த துறை மூலம் மக்களுக்கு நல்வாழ்வை ஏற்படுத்துங்கள்!

ஒரு கிராம நிர்வாக அலுவலர் சரியாக பணியாற்றினால், அந்த கிராமமே மாற்றத்தைக் காணும்! ஒரு ஆசிரியர் ஒழுங்காக பணியாற்றினால், அறிவார்ந்த ஒழுக்கம் மிகுந்த தலைமுறை உருவாகும்! எதிர்காலம் ஒளி மிகுந்ததாக இருக்கும்! ஒரு மருத்துவர் கடமையுணர்வுடன் பணியாற்றும்போது, ஒரு உயிர் காப்பாற்றப்பட்டு, அவர்கள் குடும்பமே மகிழ்ச்சிக்குள்ளாகிறது! அப்படிப்பட்ட மகிழ்ச்சியை நீங்கள் சார்ந்த துறை மூலமாக, தமிழ்நாட்டு மக்களுடைய வாழ்க்கையில் ஏற்படுத்த வேண்டும்!

**நம்முடைய நிர்வாகம் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். மக்கள் நல திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்ற, அரசின் வருவாய்களை பெருக்க வேண்டும்; பொருளாதார வளர்ச்சியை தக்க வைக்கவேண்டும்; அடுத்த தலைமுறையை கைதூக்கி விடவேண்டும். அதற்கான மன உறுதியை நெஞ்சில் ஏந்தியபடி இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன். நீங்களும் வாழ்க்கையில் பல தடைகளை கடந்து, தேர்வில் வெற்றி பெற்று, இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறீர்கள். நீங்களும் அப்படித்தான் ஃபீல் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.**

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி, உங்களுடன் ஸ்டாலின் போன்ற ஏராளமான முன்னோடி திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்! இது வரைக்கும், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மக்களைத் தேடிச் சென்று அரசு ஊழியர்கள் அவர்களுடைய குறைகளை தீர்த்து வைத்திருக்கிறார்கள். 22 இலட்சம் பட்டாக்களை வழங்கி இருக்கிறோம். இந்தத் திட்டங்கள் எல்லாம் நம்முடைய அரசுக்கு நல்ல பெயரைத் தேடி கொடுத்திருக்கிறது என்றால், அதற்கு காரணம், அரசு ஊழியர்களும் – ஆசிரியர்களும்தான்!

### அரசுக்கும் மக்களுக்கும் பாலமாகச் செயல்படுங்கள்!

அரசியலில் இருக்கின்ற நாங்கள், கொள்கைகளை வகுக்கிறோம், திட்டங்களைத் தீட்டுகிறோம், சட்டங்களை இயற்றுகிறோம், பட்ஜெட் போடுகிறோம், நிதி ஒதுக்குகிறோம். இவையெல்லாம், களத்தில் சிறப்பாக செயல்படுத்தப்படுவதும், மக்களுக்கு அதனுடைய பலன்கள் முழுமையாக கிடைப்பதும் அரசு ஊழியர்களான உங்களிடம்தான் இருக்கிறது! இப்படி, அரசுக்கும், மக்களுக்கும் பாலமாக செயல்படப் போகின்ற உங்களை நான் மனதார வாழ்த்தி வரவேற்கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசின், கடந்த ஐந்தாண்டுகளில், உங்களைப் போன்று எத்தனை பேரை அரசு அதிகாரிகளாக நிர்வாகத்திற்குள் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற புள்ளி விவரத்தை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அது இந்த அரசின் முக்கியமான சாதனை!

### கழக ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் அரசு அதிகாரிகளானோர்!

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 45 ஆயிரத்து 126 பேர் இதுவரை வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 24 ஆயிரத்து 927 பேர் வேலையில் சேர்ந்திருக்கிறார்கள்.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக 12 ஆயிரத்து 894 பேர் சேர்ந்திருக்கிறார்கள்.

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக 11 ஆயிரத்து 244 பேர் சேர்ந்திருக்கிறார்கள்.

இதுமட்டுமல்லாமல், பணியின்போது இயற்கை எய்தும் அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு, கருணை அடிப்படையில் பணி வழங்கும் திட்டத்தின்கீழ் 5 ஆயிரத்து 899 பேர் சேர்ந்திருக்கிறார்கள்.

பல்வேறு அரசுத் துறைகள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக 54 ஆயிரத்து 864 பேர் சேர்ந்திருக்கிறார்கள்.

விளையாட்டு இடஒதுக்கீட்டில், 177 பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது.

இந்த ஐந்தாண்டு காலத்தில், மொத்தம் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 131 இளைஞர்களுக்கு பணி நியமனத்தை வழங்கியிருக்கிறோம்.

இதையெல்லாம், அரசுத் துறைகளில் செய்தது என்றால், பல்வேறு முதலீட்டா ளர்கள் மாநாடு, உலக முதலீட்டாளர்கள் மாநாடு, வெளிநாட்டுப் பயணங்கள் மூலமாக, தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கின்ற தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மூலமாக, கிட்டத்தட்ட 38 இலட்சம் வேலைவாய்ப்புகளை உறுதி செய்திருக்கிறோம்.

நேற்றுகூட, தொழில்துறையின் செயலாக்க மாநாட்டில் இதை பற்றி விரிவாக பேசியிருக்கிறேன். இப்படி, இளைஞர்களுக்காக, வளமான தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்காக நாங்கள் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறோம்.

### நீங்கள் நேர்மையாக இருந்தால் அரசின் நேர்மைத்தன்மை வெளிப்படும்!


இந்த நிகழ்ச்சி மூலமாக உங்களுக்கு நான் வைக்கின்ற வேண்டுகோள் என்னவென்றால், உங்கள் கடமையை மனசாட்சியுடன் செய்யுங்கள். நீங்கள் நேர்மையாக இருந்தால், அது அரசின் நேர்மைத் தன்மையை வெளிப்படுத்தும்.

காலம் தவறாமல் கடமை உணர்வோடு மக்களுக்கு எளிதில் அணுகக் கூடியவர்களாக, மக்களுக்கு பரிவுகாட்டக்கூடியவர்களாக நீங்கள் இருந்தால், அதுவே, உங்களுக்குப் பெருமையைத் தேடி தரும். அரசுக்காக உழைப்பைக் கொடுக்கின்ற அதேநேரத்தில், உங்களுடைய உடல்நலனையும் நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள். தமிழ்நாட்டின் எதிர்காலம் என்பது, உங்களைப் போன்ற இளம் அரசுப் பணியாளர்களிடம் தான் இருக்கிறது. அதேபோல, உங்களுடைய எதிர்காலத்தைப் பார்த்துக் கொள்ள நான் எப்போதும் இருப்பேன். திராவிட மாடல் அரசு எப்போதும் உங்களுக்கு துணையாக இருக்கும்!

இப்போது கூட, அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவர்களுடைய பாராட்டுகளைப் பெற்றிருக்கிறோம். எனவே, நீங்கள் தொடர்ந்து சிறப்பாக செயல்படவும், உங்களுடைய கரியர் சக்சஸ்ஃபுல்லாக அமைவதற்கும், மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# அதானே!



**நா**ட்டிற்கு வரி வருவாயை அள்ளிக் கொடுக்கும்

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின்

பட்ஜெட் குறித்து வாய் திறக்க மாட்டோம்…

திருப்பரங்குன்றத்தில் மதவெறியைத் தூண்டி மக்களைப் பிளவுபடுத்தும்

பாரதீய ஜனதாவின் கெடு நோக்கம் குறித்தும்

வாய் திறக்க மாட்டோம்…

எதிர்நிலை வாக்குகளைக் குறிவைத்து

பா.ஜ.க. முன்னெடுக்கும்

'SIR' ஐ நாடே எதிர்த்தாலும் நாங்கள்

அது குறித்தும் வாய் திறக்க மாட்டோம்…

ஆனால் பா.ஜ.க.வை கொள்கை எதிரி எனச் சொல்லி

பா.ஜ.க.வை தமிழகத்தில் தலைதூக்க விடாமல்

தடுக்கும் சிறுபான்மை மக்கள் ஓட்டுகளைப் பிரித்து

அந்தக் கொள்கை எதிரிக்கு உதவிடுவோம் என்றால்

இதெல்லாம் புரியாமல் இருக்க தமிழ்நாடு என்ன……..

**என்னநாஞ் சொல்றது**



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித்
தொடர்புக்குழு துணைத்
தலைவர்

## தமிழ்நாடு வெல்லட்டும்! வெல்வோம் ஒன்றாக!

# தமிழ்நாடு VS என்.டி.ஏ. எனும் ஜனநாயகப் போரில் தமிழ்நாடு தலைகுனியாது!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் சூளுரை!

சென்னை, பிப்.14 -

தமிழ்நாடு VS என்.டி.ஏ. எனும் ஜனநாயகப் போரில் தமிழ்நாடு தலைகுனியாது. தமிழ்நாடு வெல்லட்டும்! வெல்வோம் ஒன்றாக என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் சூளுரைத்துள்ளார்.

இது குறித்து நேற்று முன்தினம் (12-02-2026), கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**"பட்ஜெட்டில் "ஜீரோ" கொடுத்தால் கைகட்டி வேடிக்கை பார்ப்போம் என்று நினைத்தார்களா?**

**தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மட்டுமே எண்ணமாகக் கொண்டு செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் திரண்டு தமிழ்நாட்டு மக்களின் குரலாகக் கேள்வி கேட்டுள்ளது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி!**

**தமிழ்நாட்டுக்கான நிதிகளை மறுத்து அநீதியை இழைக்கும் NDA கூட்டணிக்கு "ஜீரோ"வைத் திருப்பியளிப்போம்!**

**TamilNaduVsNDA எனும் இந்த ஜனநாயகப் போரில் தமிழ்நாடு தலைகுனியாது! தமிழ்நாடு வெல்லட்டும்! வெல்வோம் ஒன்றாக!"**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட

# தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) - மாவட்ட கண்காணிப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) – சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) – மாவட்ட கண்காணிப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் ( 14-02-2026 – சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் தலைமையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றிட கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் – துணைச் செயலாளர்கள் – தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) – சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் இருவர் (CLC-2) – மாவட்ட கண்காணிப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : SIR குறித்து

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18